**O.S. No. 225  /2022**

**Date: 04.02 .2026**

.**வா.சா. 2 சந்திரசேகர்**

**2, 4 முதல் 8 பிரதிவாதிகள்  வரையிலானவர்கள்  தரப்பு குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கின் 2ம் வாதி.  புதுக்கோட்டை என்பவரின் மகன் என்றால் சரிதான்.  நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன்.  இந்த வழக்குக்கு முன்பாக இது சம்மந்தமாக பல வழக்குகள் நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது அப்பாவுக்கு தெரியும்.  சார்பு நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட பொதுவான தீர்ப்பில் எங்களுக்கு 16ல் 9 பங்கு உண்டு என்று மேற்படி தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது.  மேற்படி தீர்ப்பை நான் படித்துப் பார்த்தேனா என்றால்  இல்லை.  மேற்படி தீர்ப்பில் 16ல் 9 பங்கு உண்டு என்று சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.  இந்த வழக்கானது முந்தைய மேல் முறையீடு வழக்குகளான AS.No.24/2016, AS.No. 44/2017 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. யோசப் என்பவருக்கு 4 மகன்களா என்றால் தெரியாது.  வா.சா.ஆ.3  1927ல் செய்யப்பட்ட பாகப் பிரவினை பத்திரத்தை படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.  இன்றைய தேதிவரை மேற்படி தபசில் கிணற்றில் எங்கள் தரப்பில் உள்ளவர்கள் தண்ணீர் இறைத்து விவசாயம் செய்யவில்லை என்று சொன்னால் செய்யவிடாமல் தடுக்கிறார்கள். இது சம்மந்தமாக நானோ, எங்கள்  தரப்பில் உள்ளவர்கள் கரிவலம் காவல் நிலையத்தில் புகார் செய்தீர்களா என்றால் புகார் செய்தோம், விசாரித்து நீதிமன்றத்தை அனுகவும் என்று சொல்லிவிட்டார்கள்.  தாவா சொத்தில் உள்ள கிணற்றில் வாதிகளும், பிரதிவாதிகளும் கூட்டாக  சேர்ந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.  27.02.2021ல் சொல்லப்பட்ட தீர்ப்பில் எங்கள் தரப்பினர்களுக்கு எவ்வளவு பங்கு உண்டு என்று சொல்லாததால் எங்களது உரிமைகளை மறுத்து வருகிறார்கள் என்றால் சரிதான். எந்த காலத்திலும் பிரதிவாதிகள் மேற்படி தாவா சொத்தைப் பொறுத்து நாங்கள்

அனுபவம் செய்ய தடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Sd/– P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.